6th February 1959]

SRI V. K. KOTHANDARAMAN : டெபுடி சேவக்குகள் என்றால் என்ன அர்த்தம்? "டெபுடி" என்பது ஆங்கில வார்த்தையாகவும், 'சேவக்' என் பது ஹிந்தி வார்த்தையாகவும் இருக்கின்றன. ஆகையால் கனம் மந்திரி இந்தப் பதத்திற்கு அர்த்தம் சொல்வாரா? அத்துடன் இந்தப் பதத்தை தமிழிலும் மொழி பெயர்த்து அந்த வார்த்தையை உபயோகத்திற்குக் கொண்டுவர முடியுமா? (சிரிப்பு.)

(No answer.)

Orphanages

*66 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 3—4—1958 தேதி 536 நெ. கேள்விக்கு மேஜை பேரில் வைக் கப்பட்ட பேபரில் கண்டுள்ளபடி ஜில்லாவாரியாக, ஒவ்வொரு அனாதை விடுதிகளிலும் கிருஸ்துவர்—முஸ்லீம்—ஜாதி ஹிந்துக்கள் தாழ்த்தப்பட்ட வர்கள் எத்தனை பேர் ?

(ஆ) ஒவ்வொரு அனாதை விடுதிக்கும் ஒரேமாதிரியான கிராண்ட் இல்லாமல், தாரதம்மியப்படுத்திக் கொடுப்பதற்குக் காரணம் என்ன ?

(இ) அனாதை விடுதிகளை சர்க்காரே எடுத்து நடத்த ஏதேனும் உத் தேசமுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The total number of children who are Christians, Muslims, etc., are as follows :—

Christians	9,668
Muslims	478
Caste Hindus	7,407
Scheduled Castes	3,185
Scheduled Tribes	3

(*b*) The Government pay as per capita grant of Rs. 10 per in-mate in respect of orphanages situated in the plains and a per capita grant of Rs. 15 for orphanages situated in the Hill stations. But for this difference, the rates are uniform. No discrimination is made on ground of caste, etc. The grants are assessed only in respect of in-mates eligible for the grant (viz.), those destitutes who are between 5 and 18 and are reading in schools recognized by the Education Department.

(*c*) No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : 3—4—1958-ம் தேதி 536-ம் கேள்விக்கு மேஜையில் வைக்கப்பட்ட ஸ்டேட்மெண்டைப் பார்க்கும்போது இந்த கிராண்டுகள் தாரதம்மியமான முறையில்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இனிமேல் இவ்வாறு தாரதம்மியப்படுத்தாமல் ஒரே விதமாக கிராண்டுகள் கொடுக்கப்படுமா? இத்தகைய அனாதை விடுதிகளை சர்க்காரே எடுத்து நடத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் ஏற்கனவே பதிலளித்த பிரகாரம் இந்த கிராண்டுகள் ஒரே விதமாகத்தான் கொடுக்கப்படுகின்றன. சமவெளிகளிலுள்ள விடுதிகளுக்கு 10 ரூபாய் வீதமும், மலைப் பிராந்தியங் களிலுள்ள விடுதிகளுக்கு 15 ரூபாய் வீதமும் இவை கொடுக்கப்படுகின்றன. இதில் தாரதம்மியம் இல்லை. இவைகளை எடுத்து நடத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. இதில் "நேஷனலைஸேஷன் பாலிஸியும்" வராது.

[6th February 1959

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் சிறுபான்மையினரான சமூகத்தினருக்கு மிக அதிகமான அளவில் கிராண்டு வழங்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த சமூகத்தினர் அதிக அனாதை விடுதிகளை நடத்துகிறார்கள் என்பதைத்தான் இது காண்பிக்கிறது. மற்ற விடுதிகளில் அனாதைகள் அதிகமாக இருக்கக்கூடும். ஆனால் இவர்கள்தான் அதிகமான அனாதை விடுதிகளை நடத்துகிறார்கள்.

SRI K. B. S. MANI : அனாதை விடுதிகள் விஷயத்தில் கிருஸ்துவர்கள் தவிர, இந்துக்கள் போன்ற மதத்தினர் நடத்தும் விடுதிகளில் அந்த விடுதிகளில் நிர்வாகிகளின் சொந்தக்காரப் பிள்ளைகளும் வேண்டியவர்களும் அனாதைகள் என்ற பெயரில் பராமரிக்கப்பட்டுவருவது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால் இதன்பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சம்பந்தமாக கனம் அங்கத்தினரிடம் தகவல் ஏதாவது இருந்தால் அதை சர்க்காரிடம் அவர் தெரிவிப்பாரானால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

SRI A. A. RASHEED : Is there any proposal to increase the grant to these orphanages?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது இப்போது தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. அது முன்பு 8 ரூபாயாக இருந்தது. 1—10—1958-லிருந்து அதை 2 ரூபாய் உயர்த்தி 10 ரூபாயாகக் கொடுத்துவருகிறோம்.

Government dispensaries in South Arcot district

* 67 *Q.*—SRI A. GOVINDASAMY (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of dispensaries run by the Government in the South Arcot district; and

(*b*) the number of Medical Officers in charge of them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Three, Sir.
(*b*) One in charge of each dispensary.

SRI A. GOVINDASAMY : கண்டமங்கலத்தில் சர்க்காரால் நடத்தப்பட்டு வந்த ஆஸ்பத்திரியானது தற்சமயம் மூடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் திறக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது வேறு விஷயம் அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Commercial Taxes Department

* 68 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Deputy Commercial Tax Officers and Commercial Tax Officers employed in the Commercial Taxes Department on or after the 27th August 1958?